In the court of District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

O.S. No. 133/11

DW2

Deposition of witness plaintiff/Defendant

Solemenly affirmed to Thiru/Tmt.
Of this court in accordance with the provision of Act of 1972
on the day of

Name: Raman Caste:

Father's Name Calling:

District: Religion: Age:

CHIEF EXAMINATION; 09.10.18
நான் இந்த வழக்கின் 6ம் பிரதிவாதி. 7 முதல் 9 பிரதிவாதிகளுக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய முதல்விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது என்னுடைய தகவலின்பேரில் தயாரிக்கப்பட்டது.

1 முதல் 5 மற்றும் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

கூலும் நல்லுவும் அவர்கள் சொத்தினை தமிழரசனுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் தகப்பனாருக்கு 75 செண்டும், வாதிகளுக்கு 75 செண்டும் தனியாக பிரித்து அதன்படி அவரவர் பாகத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அவர்களுடைய 75 செண்டு கிழக்குப்பக்கமும் எங்களுடைய 75 செண்டு மேற்குப்பக்கமும் அமைந்துள்ளது. அந்த கிழக்குப்பக்கம் உள்ள 75 செண்டில் தான் கூலுவும் நல்லுவும் தாங்க்ள் அனுபவித்து வந்த தலா 25 செண்டு வீதம் 50 செண்டை தமிழரசனுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நாகமுத்துவுடன் உடன் பிறந்த நபர் பெயர் மச்சக்காளை. அவருடைய மகன் தான் முனியாண்டி மற்றும் காசி என்றால் சரிதான். எங்களுயை 75 செண்டில் முனியாண்டி 2 செண்டில் அரசு தொகுப்பு வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். எங்களுடைய 75 செண்டு பாகம் பிரித்துக் கொள்ளாமல் அப்படியே உள்ளது. என்னுடைய தாயார் என் தகப்பனாருக்கு 2வது தாரம் என்று சொன்னால் சரியல்ல. நாகமுத்துவின் அம்மாதான் என் தகப்பனாருக்கு முதல்தாரம்

என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து 1.50 ஏக்கரில் மேல்புறம் 75 செண்டு முழுவதும் நாகமுத்து மற்றும் மச்சக்காளைக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மச்சக்காளை காலமானபிறகு அவரது மகன்களான முனியாண்டியும் காசியும் நாகமுத்துவுடன் அதனை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த மேல்புறம் 75 செண்டில் 6 முதல் 9 பிரதிவாதிகளாகிய எங்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றும் அதனை ஒருபோதும் அனுபவித்ததில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் ஊரை ஒட்டி வடபுறம் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட 10 செண்டு உள்ளது. அதனை இன்னும் பாகம் பிரிக்கவில்லை. பொதுவாக உள்ளது. அதை பாகத்தின்போது எங்கள் பங்கிற்கு என்று தனியாக ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது 10 செண்டு இல்லை என்றும் 25 செண்டு என்றும் சொன்னால் சரியல்ல. அதனை நாங்கள் தான் தனித்து அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு ஏற்கனவே சொத்து பிரித்து ஒதுக்க்ப்பட்டுவிட்டது என்றும் அதனால் வழக்கு சொத்தில் மேல்புறம் 75 செண்டில் எங்களுக்கு உரிமையும் அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் என் அப்பா காலத்திற்கு பிறகு எங்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் பெற்று தீர்வை ரசீது செலுத்தியுள்ளோமா என்றால் என் அப்பா பெயரில்தான் உள்ளது. எங்கள் பெயரில் இல்லை. இருதரப்பனர் பெயரிலும் இல்லை. என் அப்பா காலமாகி 15 ஆண்டுகளுக்கு மேலாகிறது. தற்போது என் அப்பா பெயரில் பட்டா இல்லை என்றும் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.நான் வழக்கின் உண்மை நிலையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

/Sd./Raman

Taken down be me in open court

Read over to the witness in the presence of accused and admitted by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,

District Munsif cum Judicial Magistrate No.I,

Usilampatti.